டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில்

பழந்தமிழ்நாட்டின் குடவோலை முறை அலங்கார ஊர்தி!

10 ஆம் நூற்றாண்டு சோழர் கால தேர்தல் முறையை பிரதிபலித்தது!

டெல்லி, ஜன.27- டெல்லியில் நேற்று நடைபெற்ற குடியரசு தின விழாவில் "பழந்தமிழ்நாட்டின் குடவோலை முறை - மக்களாட்சியின் தாய்" என்ற கருப்பொருளின் அடிப்படையில், 10 ஆம் நூற்றாண்டு சோழர்காலக் குடவோலைமுறையை மையப்படுத்தி தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்தி உருவாக்கப்பட்டு, கடமைப் பாதையில் ஊர்வலம் சென்றது.

இந்த அலங்கார ஊர்தியானது, சோழர் காலத்தில் நடைமுறையில் இருந்த (குடத்தில் பனையோலைகள்) தேர்தல் முறையைப் பிரதிபலிக்கிறது. இது மக்களாட்சி முறையின் முன்னோடியாகும். கிராம நிர்வாகத்தை நடத்துவதற்கும், அப்பகுதியின் எண்ணங்களைப் பேரரசுக்குத் தெரிவிக்கப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் இது பயன்பட்டது. தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர் கல்வெட்டுகளில் குடவோலை முறைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. இந்த அமைப்பு ஜனநாயகத்தை நோக்கிய ஒரு தொடக்கநிலை முன்னெடுப்பைக் குறிக்கிறது.

டிராக்டர் / முகப்புப் பகுதியில் உள்ள சிற்பம் அனைத்து ஓலைகளும் குடத்தில் போடப்பட்ட பிறகு பிரதிநிதிகள் தேர்வுமுறையைச் சித்தரிக்கிறது. டிரெய்லர் / முதன்மைப் பகுதியானது தேர்தல் நடைமுறைகள் மற்றும் கிராம மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தலை விவரிக்கிறது. முக்கியத் தகவல்களை மக்களுக்கு அறிவிக்கப் பயன்படும் பறை, ஊரின் குறிப்பிட்ட பகுதியிலுள்ள அனைத்து மக்களும் தங்கள் வாக்குச்சீட்டுகளை குடத்தில் இடுவதற்கு வரிசையில் நிற்றல், ஒரு சிறுவன் குடத்திலிருந்து ஓலையை எடுத்தவுடன் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் பெயரினை உரக்க அறிவித்தல், தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு ஊர்ப் பெரியவர்கள் மாலை அணிவித்து வாழ்த்துதல் & வெற்றியைக் கொண்டாடும் வகையில் ஆடுதல், கிராம மக்கள் ஓர் ஆலமரத்தடியில் ஒன்றுகூடி கிராம மேம்பாட்டுத் திட்டங்களைத் தீட்டுதல் ஆகிய காட்சிகள் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

குடவோலை முறையை விவரிக்கும் கல்வெட்டு அமைந்துள்ள உத்திரமேரூர் வைகுண்டபெருமாள் கோயிலின் உருவ மாதிரியும் இந்த அலங்கார ஊர்தியில் இடம் பெற்றுள்ளது. மேலும், குடவோலை குறித்துக் குறிப்பிடும் மருதன் இளநாகனார் எழுதிய 'கயிறுபிணிக் குழிசி ஓலை' என்ற சங்க இலக்கிய அகநானூற்றுப் பாடல் வரிகளுக்கு இசைக்கோர்ப்பு செய்யப்பட்டு மகளிர் ஆடிய நடனம் பார்வையாளர்கள் அனைவரையும் கவர்ந்தது.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டியில் மொழிப்போர் தியாகிகள் வீர வணக்கநாள் பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் மற்றும் மாணவரணி துணை அமைப்பாளர் டி.ஜெ.ஜி.தமிழரசன், பி.தனலட்சுமி தலைமையில் நடைபெற்றது. கழக கொள்கைப்பரப்பு மாநில செயலாளரும், கழக மாநிலங்களவை குழுத் தலைவருமான திருச்சி.சிவா எம்.பி., தலைமை கழக சொற்பொழிவாளர் கதிர் மீனாட்சி சுந்தரம், பங்கேற்று சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் ஜெ.மூர்த்தி, கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், பி.வெங்கடாசலபதி, பா.செ.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, ஒன்றிய பேரூர் செயலாளர்கள் மு.மணிபாலன், கி.வே.ஆனந்தகுமார், ந.பரிமளம், டி.கே.சந்திரசேகர், ஆ.சத்தியவேல், ஜான் (எ) பொன்னுசாமி, இரா.அறிவழகன், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், ஜி.ஸ்டாலின், சகிலாஅறிவழகன், டி.சங்கர் என். கிருஷ்ணாமூர்த்தி, மு.பாஸ்கரன், கே.ஆறுமுகம், பா. தனசேகரன், எஸ்.கோபி. வி.பி.இரவிக்குமார், க.சம்பத், எம்.ஆர்ஸ்ரீதர், ஜி.ரமேஷ், ஜி.சுமன், கே.ராஜேஷ், டி.மணி, கோல்டுடி.மணி, டி.லக்ஷ்மிநாராயணன் எம்.ராமஜெயம், எம்.கேசவன், பா.பரத்குமார், அப்துல்கரீம் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தாம்பரம் மாநகராட்சி 59-வது வார்டில்

புதிய நியாயவிலைக்கடை - மருத்துவமனை!

டி.ஆர்.பாலு எம்.பி. - எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. திறந்து வைக்கின்றனர்!

பகுதிச் செயலாளர் டி.காமராஜ் அறிக்கை!

சென்னை, ஜன.27- தாம்பரம் மாநகராட்சி 4-வது மண்டலத் தலைவர் டி.காமராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தாம்பரம் மாநகராட்சி 59-வது வார்டில் உள்ள பீர்க்கன்கரணை கலைஞர் நெடுஞ்சாலையில் இன்று (27.1.24 சனிக்கிழமை) மாலை 4 மணி அளவில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் புதிதாக கட்டப்பட்டிருக்கும் நியாய விலைக்கடையையும், மருத்துவமனையையும் திறந்துவைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கும் நிகழ்வுக்கு திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா ஆகியோர் வருகை தர இருக்கிறார்கள்.

அச்சமயம் கழக பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும், பொதுமக்களும் திரளாக வந்திருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளரும், மண்டலக் குழுத் தலைவருமான டி.காமராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும், கழக இளைஞர் அணி செயலாளருமான இளைஞர்களின் எழுச்சி நாயகன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கடந்த 21/01/2024 அன்று சேலத்தில் நடைபெற்ற *எழுச்சிமிகு இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் திருவள்ளூர் மத்திய மாவட்டம் சார்பில் பங்குபெற்ற 2000 இளைஞர்களுக்கு முதல் கட்டமாக ஆவடி மாநகர தி.மு.க. இளைஞர் அணி தோழர்கள் சுமார் 560 பேருக்கு நினைவுப் பரிசாக கைக்கடிகாரத்தை முன்னாள் அமைச்சர் மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன், மாணவர் அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு, மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், பொன் விஜயன், பேபி சேகர்,ப.ச.கமலேஷ், ஜி.ஆர். திருமலை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி கருணாநிதி, அக்னி மாசெ.ராஜேஷ் மாநகர இளைஞரணி அமைப்பாளர் துர்கா பிரசாத், சதீஷ், அஃப்ரி, மகேஷ், இளஸ்ரீதர், புவனேஷ் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

குடியரசு தினத்தை முன்னிட்டு

குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் தேசியக்கொடி!

மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய் ஏற்றிவைத்து மரியாதை!

சென்னை, ஜன.27- குடியரசு தினத்தை முன்னிட்டு நேற்று (26.01.2024) சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

குடியரசு தினத்தை முன்னிட்டு நேற்று (26.01. 2024) சிந்தாதிரிப்பேட்டை யில் உள்ள சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், சென்னை குடிநீர் வாரியத்தில் 25 ஆண்டு காலம் அப்பழுக்கற்ற முறையில் சிறப்பாகப் பணியாற்றிய பணியாளர்களைப் பாராட்டி சான்றிதழ்கள் மற்றும் காசோலை களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர் மி.ஜெய்கர் ஜேசுதாஸ், பொது மேலாளர் இரா. இராஜகிருபாகரன், தலைமைப் பொறி யாளர்கள் ஆர்.கண்ணன், ஆர்.கந்தசாமி, டி.ஆர்.பார்த்தசாரதி, ஆர்.சிவமுருகன், கண்காணிப்புப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் பல்வேறு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

172 (அ) வட்டச் செயலாளர்

எஸ்.ஆர். செந்திலின் தாயார் திருமதி ராஜகுமாரி படத்திறப்பு!

கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, ஜன.27- சைதை 172 'அ' வட்ட கழகச் செயலாளர் எஸ்.ஆர். செந்திலின் தாயாரும் எஸ்.டி.ராதாகிருஷ்ணனின் துணைவியாருமான எஸ்.ஆர்.ராஜகுமாரி அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (27.01.2024, சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட, பகுதி, வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் திரளாக கலந்துகொள்கின்றனர்.

புதுச்சேரி மாநிலத்தில் 'திராவிட மாடல்' அரசு அமைவது நிச்சயம்!

வீரவணக்க நாள் கூட்டத்தில் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் பேச்சு!

புதுச்சேரி, ஜன. 27 - புதுச்சேரி மாநில தி.மு.க. மாணவர் அணி மற்றும் நெல்லித்தோப்பு, காமராஜர் நகர் தொகுதிகள் சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் சாரம் அவ்வைத் திடலில் நேற்று முன்தினம் மாலை நடந்தது.

மாநில மாணவர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எஸ்.பி. மணிமாறன் தலைமை வகித்தார். முன்னாள் அவைத்தலைவர் வழக்கறிஞர் பலராமன், திமுக பொதுக்குழு உறுப்பினர் வே. கார்த்திகேயன், தொகுதி செயலாளர்கள் செ. நடராஜன், ர. சிவக்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் பெ. வெலவன், ஆர். கோகுல், முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா. ஜெயப்பிரகாஷ் என்கிற ஜேபி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ஸ்டீபன்ராஜ், ஸ்ரீஹரி, அமுதன், கீர்த்தி எழினி, தமிழ்மகள் ஜான்சிராணி, முத்தரசன் ஆகியோர் வரவேற்று பேசினார்கள்.

தி.மு.க. தேர்தல் பணிக் குழு தலைவரும், தமிழக உயர்கல்வித் துறை அமைச்சருமான ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளருமான இரா. சிவா மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் இலயோலா த. ராஜசேகர் ஆகியோர் மொழிப்போர் தியாகிகளுக்கு பொற்கிழி வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கவுரவித்தார்கள்.

கூட்டத்தில் தமிழக அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பேசியதாவது:-

ஒன்றிய அரசின் உதவியை எதிர்பார்க்காமலேயே தமிழ்நாட்டில் எண்ணற்ற திட்டங்களை திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது. திராவிட ஆட்சியை அசைத்துவிடலாம் என்ற ஒன்றிய பாஜக அரசின் எண்ணம் ஒருபோதும் பலிக்காது. திராவிட இயக்கம் இருந்தால் தான், வளர்க்கப்பட்டால் தான் தமிழ்நாடு தமிழ்நாடாகவும், புதுச்சேரி புதுச்சேரி யாகவும் இருக்கும். தமிழகத்தை ஒட்டியுள்ள புதுச்சேரியிலும் திராவிட இயக்கத்தின் ஆட்சி இருந்தால் நன்றாகத் தான் இருக்கும். இதுபற்றி திமுக தலைமை முடிவு செய்யும். திமுக தலைவரை பற்றி பேச அண்ணாமலைக்கு என்ன தகுதி இருக்கிறது?. ராமரை வைத்து அரசியல் செய்யக்கூடாது. ராமர் கோயில் திறப்பு விழாவுக்கு ஏன் குடியரசுத் தலைவரை அழைக்கவில்லை?. இது போன்று கேள்விகளை திமுக முன்வைத்தால் அமலாக்கத்துறை, வருமான வரித்துறைகளை வைத்து மிரட்டுவது. எந்த உருட்டல், மிரட்டலுக்கெல்லாம் நாங்கள் பயப்படவும் மாட்டோம், அடிபணியவும் மாட்டோம். தமிழ்நாட்டில் ஒருகாலமும் பா.ஜ.க. மலராது. புதுச் சேரியில் திராவிட மாடல் அரசு அமைய தி.மு.க. அமைப்பாளர் சிவா கடுமையாக பாடுபடுகிறார். இதுகுறித்து கழகத் தலைவரிடம் எடுத்துச் சொல்லி, எதிர் வரும் தேர்தலில் திமுக வெற்றி பெற்று புதுச்சேரியில் மீண்டும் திராவிட மாடல் அரசு அமையும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் மாநில அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் வி. அனிபால் கென்னடி, எல். சம்பத், மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம் என்கிற சரவணன், ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக் குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே. கார்த்திகேயன், வெ. ராமசாமி, ப. செல்வநாதன், அ. சோமசுந்தரம், பா. செ. சக்திவேல், ந. தங்கவேலு, பெ. வேலவன், வீ. சண்முகம், எஸ். தர்மராஜன், ஆர். கோகுல், ஆர். ரவீந்திரன், டி. செந்தில்வேலன், டாக்டர் கா. மாயக்கிருஷ்ணன், ப. இளம்பரிதி, பெ. பழநி, மு. பிரபாகரன், வே. மாறன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் எம்.ஆர். திரா விடமணி, இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், எல்.மணிகண்டன், து. சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவக்குமார், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், ஜெ. மோகன், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ. சக்திவேல், க. ராஜாராமன், செல்வ. பார்த்திபன், கலிய. கார்த்திகேயன், சே. ராதாகிருஷ்ணன், ம. கலைவாணன், ச. அசோக் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், தொகுதி கழக நிர்வாகிகள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக பங்கேற்றனர்.

கூட்ட நிறைவில், மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் ந. கண்ணன் நன்றி கூறினார்.

இராமர் கோவில் திறப்பு விழாவினைக் கண்டிக்கும் வகையில் பதாகைகள்!

புனே திரைப்படக் கல்லூரி மாணவர்கள் மீது தாக்குதல்!

காவிக் கும்பல் வன்முறை வெறியாட்டம்!

மும்பை, ஜன. 27 - அயோத்தியில் பாபர் மசூதியை இடித்துவிட்டு அதே இடத்தில் ராமன் கோயில் கட்டப்பட்டு அதன் திறப்புவிழா நடைபெற்றது. அதனைக் கண்டிக்கும் வகையில் புனே திரைப்படக் கல்லூரி மாணவர்கள் தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்யும் வகையில் 'பாப்ரியை நினைவு கொள்வோம், அரசமைப்புச் சட்டம் கொல்லப்பட்டது' என்று பதாகைகளை வைத்துள்ளனர்.

அங்கு புகுந்த காவிக்கும்பல் 'ஜெய்சிறீராம்' என்று முழக்க மிட்டபடி, பதாகைகளைத் தீவைத்து எரித்தும், மாணவர்களைத் தாக்கியும் வன்முறை வெறி யாட்டம் போட்டுள்ளது. தாக்கப்பட்ட மாணவர்களில் 4பேர் படுகாயமடைந்தனர்.

தாக்குதலை தடுத்து நிறுத்தவோ, வன்முறை வெறியாட்டம் போட்ட காவிக்கும்பலை அப்புறப்படுத்தவோ பாதுகாப்புக்கான காவலர் எவரும் முனைப்புக் காட்டவில்லை என்று மாணவர்கள் குற்றம் சுமத்தி யுள்ளனர்.

கல்வி நிறுவனத்துக்குள் சுமார் 20 முதல் 25 பேர் கொண்ட கும்பல் பட்டப்பகலில் பிற்பகல் 1.30 மணியளவில் நுழைந்து வன்முறை வெறியாட்டம் போட்டுள்ளனர். மாணவர் சங்கத் தலைவர் மான்காப் நோக்வோகம் நுழைவாயிலை நோக்கிச் சென்ற போது, "ஜெய்சிறீராம்" என்று கத்திக்கொண்டே நுழைந்த காவிக்கும்பல் மாணவர் சங்கத் தலைவரைத் தாக்கிய போதும் பாதுகாப்புக்கான காவலர்கள் அமைதியாக இருந்துள்ளனர்.

காவிக் கும்பலின் வன்முறை குறித்து பாதுகாப்புக்கான காவலர்களிடம் கேள்வி எழுப்பிய மாணவர் சங்க பொதுச்செயலாளர் சயந்தனும் அக்கும்பலால் கடுமையாகத் தாக்கப்பட்டார். இந்தத் தாக்குதல் 23.1.2024 அன்று அரங்கேற்றப்பட்டுள்ளது. இதேபோல் கடந்த 21.1.2024 அன்றும் கல்வி நிறுவனத்துக்கு வெளியே கூடிய கும்பல் மேலும் அதிகமானவர்களுடன் வருவதாக எச்சரித்துச் சென்றது என்கின்றனர் மாணவர்கள். அந்த எச்சரிக்கை குறித்து கல்வி நிறுவனத்துக் கான காவல் அதிகாரி சஞ்சய் ஜாதவ் மற்றும் பதிவாளர் பிரதீக் ஜெயின் ஆகியோரிடம் முறை யிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மாணவர்கள் தரப்பில் கூறும்போது, "அப்பாவி மாணவர்கள் மீது குண்டர்கள் தாக்குதலை நடத்திய போது, கல்வி நிறுவனத்தில் பணியிலிருந்த பாதுகாப்புக்கான காவலர்கள் மற்றும் பணியாளர்கள் வெறுமனே பார்வையாளர்களா கவே இருந்தனர். வன்முறைகளால் மாணவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டது. மாணவர் களின் அடிப்படை உரிமையான வாழ்வுரிமையுடன் ஜனநாயக உரிமைகளும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதை மாணவர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது." என்றனர்.

இந்தக் கல்வி நிறுவனத்துக்குத் தலைவராக ஒன்றிய பா.ஜ.க. அரசால் நியமிக்கப்பட்டுள்ளவர் திரைக்கலைஞர் மாதவன். இதுவரை அவர் இந்த வன்முறைகுறித்து மூச்சு விடவில்லை.

அயோத்தியில் ராமன் கோயில் விழா நடத்தப்பட்ட அடுத்த நாளிலேயே இவ்வளவு வன்முறைகளும் காவிக்கும்பலால் அரங்கேற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை வடக்கு மாவட்டம், ஆர்.கே.நகர் மேற்கு பகுதி, 38 வது வட்டம், பரமேஸ்வரன் நகர் பகுதியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் 4 வது மண்டலக் குழுத் தலைவரும், 38 வது மாமன்ற உறுப்பினர் நேதாஜி யு.கணேசன் கலந்து கொண்டு பொதுமக்கள் குறைகளை கேட்டறிந்து பதிவு செய்து குறைகளை விரைவில் சரி செய்து தருமாறு அரசு அதிகாரிகளை கேட்டுக்கொண்டார். இதில் உதவி செயற்பொறியாளர் பாஸ்கர், வட்டக் கழகச் செயலாளர் எஸ்.எல்.சுந்தர், ப.தாமோதரன், அணில், மோகன், கார்த்திக், சுனில், பிரபு, பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்கள் சீனிவாசன் வெங்கடேசன் கோகுல் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருவண்ணாமலை த. பொன்முடி

சனவரி 27 (2008)

திருவண்ணாமலை மாவட்டக் கழகச் செயலாளர், தண்டராம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட மையக் கூட்டுறவு வங்கித் தலைவர், தண்டராம்பட்டு ஒன்றியக் கழகச் செயலாளர், கிளைக் கழகச் செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.